புரட்சிப்
# பெரியார் முழக்கம்



www.dvkperiyar.com

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு | ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | PURATCHI PERIYAR MUZHAKAM

• திருவள்ளுவர் ஆண்டு 2056 • NOVEMBER, 20 2025 • புரட்சி 25 • முழக்கம்(ISSUE) 46 • விலை(PRICE) ரூ.6.00

# கொள்கைக்காக உங்களை ஒப்படைத்துக்கொள்ளுங்கள்

## அறிவுத்திருவிழாவில் கழகத் தலைவர் உரை

**சென்னை வள்ளுவர் கோட்டத்தில் நவம்பர் 8,9 ஆகிய தேதிகளில் திமுக இளைஞர் அணி நடத்திய இருவண்ணக் கொடிக்கு வயது 75 நிகழ்ச்சியில் 'கருஞ்சட்டை கழகமும் கருப்பு சிவப்புக் கழகமும்' என தலைப்பில் ஆற்றிய உரையின் தொடர்ச்சி.**

இந்திய விடுதலையைப் பற்றி பெரியாருக்கும் அண்ணாவுக்கும் இரண்டு விதமான கருத்து வேறுபாடு இருந்தது. தலைவர் பெரியார் துக்கநாள் என்றார். பொதுச்செயலாளர் அண்ணா மகிழ்ச்சியான நாள் என்றார். இரண்டு எதிரிகளில் ஒருவன் போய்விட்டான், மகிழ்ச்சி என்றார் அண்ணா. வெள்ளைக்காரனை விட இப்போது ஆட்சியில் அமர்ந்திருப்பவன் மோசமானவன் என்பது பெரியாரின் நிலை. அப்படித்தான் இருந்தது நிலைமை. ஆகஸ்ட் 15 விடுதலை என்றார்கள், பார்ப்பனர்களுக்கு விடுதலையாக இருந்தது.

அப்படித்தான் தூத்துக்குடி மாநாட்டில் ஒரு தீர்மானத்தை பெரியார் 1948-இல் இயற்றினார். மற்ற மாகாணங்களில் என்னமோ செய்துவிட்டுப்போ. " சென்னை மாகாணம் சம்பந்தப்பட்ட வரையில் இந்திய யூனியன் அரசாங்கம் சென்னை மாகாண ஜாதிவாரி பிரதிநிதித்துவ முறை சட்டத்தை தபால், தந்தி, ரயில்வே, அகில இந்திய ரேடியோ, அகில இந்திய உத்தியோகங்களில் அனுசரிக்க வேண்டும்" அம்மாநாட்டில் தீர்மானம் இயற்றினார் பெரியார். ஆனால் அப்போது முடியவில்லை. இப்போது அகில இந்திய அளவில் மருத்துவப் படிப்புகளில் அமல்படுத்தப்படாமல் இருந்த இதர பிற்படுத்தப்பட்டோருக்கான இடஒதுக்கீட்டை வழக்கு போட்டு நடைமுறைப்படுத்தச் செய்தது திராவிட முன்னேற்றக் கழகம். அதனால் இந்தியா முழுவதும் உள்ள பிற்படுத்தப்பட்ட மாணவர்கள் பயன்பெற்றனர்.




டாக்டர் சந்திரசேகர் அவர்கள் பெரியாரை பேட்டி கண்டார். ஒன்றிய அரசினுடைய இணையமைச்சராக இருந்து குடும்ப நலத்திட்டத்தை அறிமுகப்படுத்தியவர் அவர். அனைத்திந்திய பகுத்தறிவாளர் கழகத்தின் தலைவராக இருந்தவர். சேலத்தில் பெரியார் சிலையை திறந்து சிறப்புரையாற்றியவர். அவர் சென்னை வானொலிக்காக பெரியாரை பேட்டி எடுத்தார். "அரசியல் உத்தியோகங்களில் பெண்களுக்கு 50 விழுக்காடும் ஆண்களுக்கு 50 விழுக்காடும் ஒதுக்குவது பெண்களுக்கு சம உரிமை அளிக்கும். பெண்ணடிமைத்தனத்தை ஒழிக்க உதவும்" என்று அந்த பேட்டியில் பெரியார் சொன்னார். இப்போது தி.மு.க. அரசு ஒவ்வொரு துறைகளிலும் அதைச் செய்துகொண்டு வருகிறது. குரூப் 1 பிரிவில் ஆண்களை விட பெண்கள் கூடுதலான (63 விழுக்காடு) அளவுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை நாம் பார்த்திருக்கிறோம். இதை இந்தியாவில் வேறு எங்காவது யோசித்துப் பார்க்க முடியுமா? இதற்கெல்லாம் முத்தாய்ப்பான காரணமாக இருப்பது என்பது இந்த இயக்கத்தை வழிநடத்தி, அதை ஒரு கட்டுக்கோப்பான இயக்கமாக தொடர்ந்து செலுத்துவதற்கு வாய்ப்பாக உருவாக்கி வைத்த நமது தலைவர்கள். தங்கள் இளமைக்காலத்திலிருந்து கொள்கையை உள்வாங்கியவர்களாக அதை உட்செரித்துக் கொண்டவர்களாக, தங்கள் குருதியோடு கலந்து கொண்டவர்களாக இருந்ததுதான், இத்தனை மாற்றங்களையும் நிகழ்த்த அவர்களுக்கு உந்துதலைத் தந்தது.

### வேறு எவருக்கும் வராத சிந்தனை!

ஒன்றியத்தில் மட்டும் விடுதலை நாளில் பிரதமர் கொடியேற்றுவார், குடியரசு நாளில் குடியரசுத் தலைவர் கொடியேற்றுவார். ஆனால் மாநிலங்களில் விடுதலை தினம், குடியரசு தினம் இரண்டு நாட்களிலும் ஆளுநரே கொடியேற்றுவார் என்பதுதான் வழக்கமாக இருந்தது. மாநிலத்தில் மட்டும் ஏன் இரண்டு தினங்களிலும் ஆளுநர் மட்டும் கொடியேற்ற வேண்டுமா என்று கேள்வி எழுப்புகிற சிந்தனை யாருக்கு வரும்? கலைஞர் மட்டும்தான் அந்த கேள்வியை எழுப்பினார். அதன்பின்னர்தான் விடுதலை நாளில் முதலமைச்சர் கொடியேற்றும் உரிமை கிடைத்தது. அது தமிழ்நாட்டிற்கு மட்டும் கிடைத்த உரிமை அல்ல, அனைத்து மாநிலங்களுக்கும் கலைஞர் பெற்றுத்தந்த உரிமை.

ஒவ்வொரு நிலையிலும் கூட அடித்தட்டு மக்களை சிந்திப்பவர்களாக நமது தலைவர்கள் இருந்தனர். நான் பலமுறை குறிப்பிட்டிருக்கிறேன், தார்சாலையில் தார் ஊற்றுவனுக்கு கூட காலுக்கு ஷூ வாங்கி தர வேண்டும் என்று கலைஞர் காலத்தில்தான் சட்டம் இயற்றினார். எந்த முதலமைச்சராவது தரையை பார்த்திருப்பார்களா? வானத்தை பார்த்துக்கொண்டுதான் போவார்கள். பதவிக்கு போன பின்பும், இவர் அடித்தட்டு மக்களின் காலை அல்லவா பார்த்துக்கொண்டு பயணம் செய்திருக்கிறார். அதுவும் உழைக்கும் மக்களின் கால்கள் அவர் கண்ணுக்கு தெரிந்தது. அதனால் அப்படியொரு திட்டம் வகுக்கப்பட்டது. எனவே இந்த அடித்தட்டு மக்களை உயர்த்துவதற்காகவும், வாய்ப்பு மறுக்கப்பட்டு வஞ்சிக்கப்பட்டு வாழ்கிற மக்களுக்கான வாழ்வியல் கொள்கையை உள்வாங்கியும் உருவானதுதான் திராவிடர் இயக்கம். அது இயக்கமாக இருந்தது. இயக்கத்தின் சிந்தனைகளை உள்வாங்கிய தலைவர்கள் ஆட்சிக்கு வந்தார்கள், நடைமுறைப்படுத்தினார்கள். அது தொடர்ந்து நடைமுறைப்படுத்துவதற்கான வாய்ப்பை உருவாக்கி இருக்கிறது.

தொடர்ச்சி 2ம் பக்கத்தில்

# அறிவியலை பாடமாக அல்ல வாழ்வியலாக ஏற்க வேண்டும்!

## 'நாத்திகம்' நூலை வெளியிட்டு மருத்துவர் எழிலன் பேச்சு

கழகப் பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன் கொளத்தூரில் கழகப் பெண்களே தலைமையேற்று நடத்திய நாத்திகர் விழாவை ஒட்டி கடந்த 5 மாதங்களுக்கு, மேல் புரட்சிப் பெரியார் முழக்கத்தில் எழுதிய 'கொளத்தூர் நாத்திகர் விழா சிந்தனை' தொடர் கட்டுரைகள் கழக இணையதளப் பொறுப்பாளர் விஜயகுமார் முயற்சியில், 'நாத்திகம் - சிந்தனையைத் தூண்டும் கட்டுரைகள்' நூலாக தொகுக்கப்பட்டு, 12.11.2025 அன்று சென்னை முற்போக்கு புத்தகக் காட்சியில், கழகத்தின் நிமிர்வோம் பதிப்பகம் அரங்கு எண் 22-இல் வெளியிடப்பட்டது. ஆயிரம்விளக்கு தொகுதி சட்டமன்ற உறுப்பினர் மருத்துவர் எழிலன் நாகநாதன் நூலை வெளியிட, மார்க்சிய பெரியாரிய பொதுவுடைமைக் கட்சியின் துணைப் பொதுச்செயலாளர் வாலாசா வல்லவன் பெற்றுக்கொண்டார். நூலை வெளியிட்டுப் பேசிய எழிலன் நாகநாதன், "திமுக இளைஞர் அணி சார்பாக அறிவுத் திருவிழா சிறப்புற நடைபெற்று வருகிறது. கருத்தரங்கம், கண்காட்சி என பல்வேறு முற்போக்கு கருத்தியல் கொண்ட தோழர்கள் தங்களின் படைப்புகளை வைத்துள்ளனர். திராவிடர் விடுதலைக் கழகத்தின் பொதுச்செயலாளர் எழுதியுள்ள 'நாத்திகம் - சிந்தனையைத் தூண்டும் கட்டுரைகள்' நூலை இங்கு வெளியிட்டதில் மகிழ்ச்சி அடைகிறேன்.




அடிப்படையில் திராவிடர் இயக்கத்திற்கு ஒரு வரலாறு இருக்கிறது. பெரும் மாநாடு நடத்துவார்கள், அந்த மாநாட்டின் பேச்சுக்கள் எல்லாம் தொகுக்கப்பட்டு அடுத்த மாநாட்டில் நூலாக வெளியிடப்படும். மக்களிடம் கொடுப்பார்கள். அதே திராவிடர் இயக்க தொடர்ச்சியாக பெண்கள் பகுத்தறிவு பிரச்சாரத்தையும், மாபெரும் பகுத்தறிவுப் பேரணியும், கருத்தரங்குகளில் பேசிய பேச்சுக்கள் எல்லாமே அழகாக எழுத்து வடிவில் தொகுக்கப்பட்டு நூலாக வந்துள்ளது. எப்படி சமூகத்தின் அடிப்படையில் நாத்திகம் பேசப்பட்டதோ, பிறகு அறிவியல் அடிப்படையில் நாத்திகம் பேசுவது அவசியமானது. நாம் அறிவியலை படிப்போம், ஆனால் மக்களிடத்தில் அறிவியல் விழிப்புணர்வு இருக்காது. இந்த காலச்சூழலில், நவீன உலகத்தில் குளோனிங் முறை வந்துவிட்டது; ஜீன் எடிட்டிங் வந்துவிட்டது; மரபணுக்கள் ரீதியாக கருவுற்றப் பெண்ணே, மரபணு நோய்களை சிகிக்சை மூலமாக குழந்தைக்கு நீக்க முடியும்.

இப்படி ஒருபக்கம் அறிவியல் வளர்ந்து வந்தாலும் அறிவியல் விழிப்புணர்வு மக்களிடம் வளர்ந்திருக்கிறதா? .... அறிவியல் வளர்ச்சியில் உண்டான அனைத்து கண்டுபிடிப்புகளும் ஏற்றுக்கொள்ளப்படுகிறது. அதாவது அறிவியல் வளர்ச்சியால் உண்டான சவுகரியத்தை மட்டும் ஏற்றுக்கொண்டு வாழ்வியலில் மட்டும் அதை ஏற்றுக்கொளாமல் "Split Personlality" வாழ்க்கையைத்தான் நாம் வாழ்ந்து வருகிறோம். "Split Personlality" வாழ்க்கை என்பது என்னோட வாழ்க்கையின் சவுகரியத்துக்கு அறிவியல் வேண்டும், ஆனால் வாழ்வியலாக பெறமாட்டேன் என்பதே இந்த நூலை படிக்கும்போது வாழ்வியலாக அறிவியலை ஏற்றுக்கொண்டு, பகுத்தறிவை நாம் பெற்றுவிட்டால் மனிதர்களை மனிதர்களாக பார்க்கிற பார்வை வரும். மனிதன் பிறப்பால் ஏற்றத்தாழ்வு இல்லை என்ற நிலை வரும், மத்தின் போரால், ஜாதியின் போரால் வெறிபிடித்த மனநிலை அகலும்.

நாத்திகம் என்பது சமத்துவ வாழ்க்கைக்கு எப்படி அடித்தளமானது என்பதை பல்வேறு சான்றுகளுடன் விடுதலை இராசேந்திரன் தொகுத்துள்ளார். முக்கியமாக வேத காலத்தில் இருந்து புத்தர் உருவாக்கிய பகுத்தறிவுக்களம் எப்படி அமைந்தது, அயோத்திதாச பண்டிதர் வழியாக பல்வேறு நாத்திகக் கருத்துக்களும், பிறகு தமிழ்நாட்டில் லௌகீக இயக்கம் எப்படி பகுத்தறிவுச் சிந்தனைகளை கொண்டு சென்றது, பிறகு தந்தை பெரியார் எப்படி சமூகப் புரட்சியில் நாத்திகம் என்பது வெறும் கடவுள் மறுப்பு என்று இல்லாமல் அறிவியல் பார்வையில் மக்கள் இயங்க வேண்டும் என்ற அடிப்படையில் பேசிய பல்வேறு சுவாரசியமான தகவல்கள் இந்நூலில் உள்ளது. தோழர்கள் அனைவரும் படித்து உளமாற ஏற்றுக்கொள்ள வேண்டும். நவீனமயமாதலின் விளைவாக இன்றைக்கு பெண்கள் பகுத்தறிவுடன் சிந்திக்கின்றனர். இயக்கம் சார்ந்த நடைமுறை இல்லாமல் வாழ்வியலாக சடங்குகளை தகர்த்து எறிகிறார்கள். சமூகப் புரட்சி செய்து வருகிறார்கள், ஒவ்வொரு வீட்டிலும் நடக்கிற புரட்சி வெளியில் வராது. புரட்சியின் பயன்கள் கண்டு, சமூகம் முன்னேற்றப் பாதையில் செல்லும். அதனடிப்படையில் இந்த நூலை வெளியிடுவதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

மார்க்சியப் பெரியாரிய பொதுவுடைமைக் கட்சியின் துணை பொதுச்செயலாளர் வாலாசா வல்லவன் பேசுகையில் மிகச்சிறந்த நாத்திக வழியில் வந்த குடும்பத்தைச் சார்ந்த டாக்டர் எழிலன் அவர்கள் இந்நூலை வெளியிடுவதும் நான் பெற்றுக் கொள்வதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன். கழகத் தலைமை நிலையச் செயலாளர் தபசி குமரன், ஒருங்கிணைந்த சென்னை மாவட்டச் செயலாளர் உமாபதி, தென்சென்னை மாவட்ட அமைப்பாளர் எட்வின் பிரபாகரன், தாம்பரம் பகுதி அமைப்பாளர் அருண் கோமதி, திருப்பூர் பிரசாந்த், ஊடகவியலாளர் பிரகாசு மற்றும் கழகத் தோழர் பாரி சிவா ஆகியோர் உடன் இருந்தனர்.

# தொழிலாளர் கொள்கையில் மூக்கை நுழைக்கும் மனுஸ்மிருதி!

தேசிய தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு வரைவுக் கொள்கைகள், ‘‘ஷ்ரம் ஷக்தி நிதி 2025’’ எனும் பெயரில் மோடி அரசால் வெளியிடப்பட்டுள்ளது. இக்கொள்கைகளின் அதிர்ச்சியூட்டும் அம்சம் என்னவெனில், உழைப்புச் சுரண்டலை நியாயப்படுத்தவும், சமூக ஏற்றத்தாழ்வுகளைச் சட்டக் கோட்பாடுகளாக நிலைநிறுத்தவும் பயன்படுத்தப்பட்ட மனுஸ்மிருதி, அர்த்தசாஸ்திரம் போன்ற பழமையான ஆவணங்களை அடிப்படையாகக் கொண்டே ஒன்றிய அரசின் இக்கொள்கைகள் வடிவமைக்கப்பட்டுள்ளன எனப் பகிரங்கமாக வெளிப்படுத்துவதுதான்.

ஒன்றிய அரசு வெளியிட்டுள்ள வரைவுக் கொள்கை கூறுவதாவது:

‘‘பழமை ஆவணங்களான மனுஸ்மிருதி, யக்ஞ வல்கியஸ்மிருதி, நாரதஸ்மிருதி, சுக்ரநீதி, அர்த்தசாஸ்திரம் ஆகியவை அரச நீதி குறித்து வலுவாகக் கூறியுள்ளன. நீதி, நியாயமான ஊதியம், சுரண்டலிலிருந்து தொழிலாளர்களைப் பாதுகாப்பது ஆகியவற்றை உத்தரவாதப்படுத்துவதில் ஆள்வோரின் கடமை என்ன என்பது கூறப்பட்டுள்ளது. நவீன தொழிலாளர் சட்டங்கள் உருவாவதற்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே உழைப்பை நிர்வ கிக்கும் இத்தகைய கோட்பாடுகள் இந்திய நாகரிக உருவாக்கத்தில் வலுவான அடிப்படை அம்சங்களாக உள்ளன.’’

இந்தியாவின் பாரம்பரியப் புரிதல் என்னவெனில், உழைப்பு என்பது வாழ்வாதாரத் தேவை மட்டு மல்ல; சமூக ஒற்றுமையையும் கூட்டு முன்னேற்றத்தையும் நிலைநிறுத்த உதவும் புனிதமான மற்றும் தார்மீக அம்சமும் கொண்டது என கூறும் இந்த வரைவுக் கொள்கை, இத்தகைய பாரம்பரிய ஆவணங்களிலிருந்து உத்வேகம் பெறுவதாகவும், இத்தகைய கொள்கைகள் முற்றிலும் நவீன தொழிலாளர் கொள்கைகளுடன் இசைந்துள்ளதாகவும் கூறுகிறது. ‘‘தார்மீகம்’’, ‘‘புனிதம்’’ போன்ற வார்த்தைகள் உழைப்புச் சுரண்டலையும் அதன் பாதக விளைவுகளையும் மூடி மறைக்கும் பட்டுத்துணி என்பதை கூறத் தேவையில்லை.

மௌரியர் காலத்துக்கு முன்பு அபஸ்தாம்ப தர்மசூத்திரம், பவுதாயன தர்மசூத்திரம், கௌதம தர்மசூத்திரம், வசிஷ்டர் தர்மசூத்திரம் (கி.மு. 300க்கு முன்பு), மௌரியர்கள் காலத்தில் உருவான அர்த்தசாஸ்திரம் (கி.மு. 300 முதல் 200), பின்னர் உருவான மனுஸ்மிருதி (கி.மு. 200 முதல் கி.பி. 200 வரை), அதற்குப் பின்னர் உருவான யக்ஞ வல்கியஸ்மிருதி, நாரதஸ்மிருதி, விஷ்ணுஸ்மிருதி (கி. பி. 200 முதல் 500 வரை) போன்ற பல கோட்பாடு களும் அடிப்படையில் சொன்ன கருத்து என்ன? சமூகம் நால் வர்ணங்களைக் கொண்டது; அதில் உழைப்பை வழங்கும் சூத்திர வர்ணம் கடைக்கோடியில் உள்ளது; சூத்திரர்களின் கடமை ஏனைய வர் ணத்தாருக்குக் குறிப்பாகப் பிராமணர்கள் மற்றும் சத்திரிய வர்ணத்தாருக்குப் பணிவிடை செய்வது என்பதுதான்.

அர்த்தசாஸ்திரத்தின் பொருளாதார அம்சங்கள்

சூத்திரர்களின் பொருளாதாரம் மற்றும் ஊதியம் குறித்துப் பல கோட்பாடுகளை உருவாக்கியது அர்த்தசாஸ்திரமே. அது முன்வைக்கும் சில அம்சங்கள்:

* புறம்போக்கு நிலங்களைச் சூத்திரர்களின் உழைப்பு மூலம் விளை நிலங்களாக மாற்ற வேண்டும். * இதற்காகச் சூத்திரர்களை அடிமைகளாகப் பயன்படுத்தலாம்.

* நிலங்களை அவர்கள் நிர்வகிக்க அனுமதிக்கலாம், ஆனால் நில உரிமை தரக்கூடாது.

* இலக்குகள் நிறைவேற்றாவிட்டால் நிலம் திரும்பப் பறிக்கப்பட வேண்டும்.

* கால்நடைகளைப் பராமரிக்கும் சூத்திரர்கள் ஒரு கால்நடையைத் தொலைத்தால் கூடத் தண்டனை வழங்க வேண்டும்; அது மரண தண்டனையாகவும் இருக்கலாம்.

* தொல்லைகளின் பிறப்பிடம் தொழிலாளர்கள்தான்! எனவே அவர்களைப் பொருத்தமாகக் கையாள வேண்டும்.

* நிலத்தில் இலக்குகளைத் தவறும் சூத்திர உழைப்பாளிக்கு உடனடியாக ஊதியத்தில் 25% அபராதம்.

* தொடர்ந்து இலக்குகள் தவறினால் ஊதியத்தை விட இரு மடங்கு அபராதம்.

* ஒரு பிராமண ஆன்மீகவாதிக்கு 48,000 பனா (நாணய மதிப்பு) ஊதியம் எனில், சூத்திர கைவினைஞருக்கு 120 பனாக்கள்தான் ஊதியம்.

* வீடுகளில் பணிபுரியும் பணியாளருக்கு 60 பனாக்களுக்கு மேல் ஊதியம் கூடாது.

* அரசு உயர் பதவிகளில் சூத்திரர்களுக்கு இடம் தரக்கூடாது.

* உயர் வர்ணத்தாரின் சட்டப் பிரச்சனைகளில் சூத்திரர்கள் அல்லது சண்டாளர்களின் சாட்சியம் செல்லாது.

* ஒரே குற்றத்தைச் செய்த சூத்திரனுக்குக் கடும் தண்டனையும் உயர் வர்ணத்தாருக்குக் குறைவான தண்டனையும் தரப்பட வேண்டும்.

* உயர் வர்ணங்களைச் சேர்ந்த பெண்கள் சூத்திர ஆண்களை மணந்தால், அவர்கள் மூலம் பிறக்கும் ஆண் குழந்தைகளுக்குச் சொத்துரிமை கிடையாது.

* அவர்ணத்தாரான சண்டாளர்கள் சூத்திரர்களுக்குக் கூட இணையில்லாத இழிவானவர்கள்.

* சண்டாளர்களைக் கண்ட கண்கள் கூட அசுத்தப்பட்டுவிடும்; எனவே உடனடியாகக் கண்கள் கழுவப்பட வேண்டும். மனுஸ்மிருதியின் பொருளாதார அம்சங்கள்

* சூத்திரர்கள் சொத்து சேமிக்க அனுமதிக்கக் கூடாது. ஏனெனில் அது பிராமணர்களுக்கு வலியைத்தரும்.

* தமக்குத் தேவையெனில், பிராமணர்கள் சூத்திரர்களின் சொத்துக்களை எப்பொழுது வேண்டுமானாலும் பறிக்கலாம்.

* கடனுக்கு வட்டி வசூல் செய்யும்பொழுது பிராமணர்களுக்கும் சத்திரியர்களுக்கும் குறைவான வட்டியும் சூத்திரர்களுக்கு அதிகமான வட்டியும் விதிக்கப்பட வேண்டும்.

* உயர் வர்ணப் பெண்களுக்குப் பிறக்கும் சூத்திர குழந்தைகளுக்கு 10%க்கு மேல் சொத்து தரக்கூடாது.

* உயர் வர்ணத்தாரின் எஞ்சிய உடைகள், உணவுகள்தான் சூத்திரர்கள் பயன்படுத்த வேண்டும்.

(தீக்கதிர் செய்தியில் இருந்து)

*1ம் பக்கம் தொடர்ச்சி..*

## *சுயமரியாதைச் சாயம் போகாது!*

*எனவே இந்த காலகட்டத்தில் இளைஞர்களாக இருப்பவர்களும், அந்த கொள்கையை உடசெரித்துக்கொண்டு, உள்வாங்கிக் கொண்டு, குருதி ஓட்டத்தில் கலந்து கொண்டிருக்க வேண்டும் என்பதற்காகத்தான் இளைஞர் அணி இந்த அறிவுத்திருவிழாவை ஏற்பாடு செய்திருக்கிறது. இடையில் வந்து கட்சியில் சேர்ந்தவர்களுக்கு இந்த கொள்கை உணர்வு வாய்க்குமா வாய்க்காதா நமக்குத் தெரியாது. ஆனால் இளமைக்காலத்திலிருந்து உள்வாங்கிக் கொண்டிருப்பவர்கள், இளமைக்காலத்திலேயே கொள்கையை உச்சரித்துக் கொண்டிருப்பவர்கள் நினைத்தாலும் மாறிப்போக முடியாது. எங்களுடைய தலைவர் ஒருவர் சொல்லுவார் "சுயமரியாதைச் சாயம் கெட்டிச்சாயம்; துணி கிழிந்தால்தான் உண்டு; சாயம் போகாது" என்பார். நாம் கெட்டிச்சாயமான சுயமரியாதைச் சாயத்தை திராவிடர் அடையாள சாயத்தை மனதில் ஏந்திக் கொள்வோம்.*

*இளைஞர்களுக்கு வகுப்புகள் நடத்தி கொள்கைகளை தெளிவுபடுத்த வேண்டும் என்பதும், இளம் பேச்சாளர்களை உருவாக்க வேண்டும் என்பதும், நீங்களும் கொள்கைகளை உள்வாங்கிக் கொள்வதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுப்பதும் என உங்களை கொள்கையாளர்களாக உருவாக்கவே இத்தகைய முயற்சிகள் எடுக்கப்படுகின்றன. 1949-இல் திமுக உருவானபோது தலைவர் கலைஞருக்கு என்ன வயது? 25 வயதுதான். கட்சியில் வயதானவரே அண்ணாதான். அவருக்கு வயது 40. மற்ற எல்லோருமே இளைஞர்கள்தான். இளைஞர்கள் இணைந்துதான் இந்த இயக்கம் உருவானது.*

*18 ஆண்டுகள் கழித்து ஆட்சிக்கு வரும்போதும் பலரின் வயது 40க்கு குறைவுதான். 25 வயதில் அவர்கள் உள்வாங்கிய சிந்தனையை, 40 வயதில் ஆட்சியில் அமர்ந்தபோது செயல்படுத்தினார்கள். இப்போது உங்களிடமும் அதைத்தான் எதிர்பார்க்கிறார்கள். நீங்களும் இந்த இயக்கத்தின் சிந்தனைகளை உள்வாங்கி கொள்கைப்புரிதலை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். பின்னர் அதை செயல்படுத்த வேண்டுமென்று எதிர்பார்க்கிறார்கள். அதற்கு நீங்கள் துணை நிற்க வேண்டும்.*

*செயல்படுத்துமாறு உங்களிடம் எதிர்பார்க்கிறார்கள்; நீங்கள் அதற்கு துணை நில்லுங்கள். எங்கள் மூளைக்குள் இந்த கொள்கை ஏறியது உங்களைப்போல நாங்கள் இளைஞராக இருந்த காலத்தில்தான். நீங்களும் நல்ல இலட்சியவாதிகளாக வளர வேண்டுமென்பதற்காகத்தான் இளைஞர் அணி இந்த பணிகளை முன்னெடுக்கிறது. பழைய கட்சிக்காரர்களை நான் இப்போது எண்ணிப் பார்க்கிறேன். அவர்கள் இளமைக்காலத்திலேயே இந்த கொள்கையில் மூழ்கியவர்கள். அவர்கள் எப்படி இருந்தார்கள் என்று நீங்களும் அறிந்துகொள்ள வேண்டும்.*

## *இயக்கத்திற்காக உங்களை ஒப்படையுங்கள்!*

*பெரியார் நூற்றாண்டு விழாவில் பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெற்றன. எந்த இயக்கம் நிகழ்ச்சி நடத்துகிறதோ அவர்கள் நாடகம் நடிப்பார்கள், இசை நிகழ்ச்சி நடத்துவார்கள். ஆனால் பெரியார் நூற்றாண்டு விழாவில் சென்னை பெரியார் திடலில் நடைபெற்ற நிகழ்ச்சியில் நீதிதேவன் மயக்கம் நாடகம் நடைபெற்றது. நாடகத்தில் நடித்தவர்கள் யார் தெரியுமா? ராவணனாக நடித்தவர் உத்தரமேரூர் கே.எம் ராஜகோபால். திராவிட முன்னேற்றக் கழகத்தின் சட்டமன்ற உறுப்பினராக மூன்று முறை இருந்தவர். கம்பராக நடித்தவர் சி.வி.எம். அண்ணாமலை. அமைச்சராக இருந்தவர். நீதிதேவனாக நடித்தவர் சி.வி. சம்பந்தம். சட்ட மேலவை உறுப்பினராக இருந்தவர்.*

*ஒருமுறை அமைச்சராக, சட்டமன்ற உறுப்பினராக இருப்போர் மேடையேறி நடிப்பாரா என்பதே ஐயம். ஆனால் இன்னொரு இயக்கத்தின் நிகழ்ச்சியில் மேடை நாடகம் நடத்துகிறார்கள். அதுவும் முன்னாள் அமைச்சர் நடிக்கிறார்; முன்னாள் சட்டமன்ற உறுப்பினர், முன்னாள் மேலவை உறுப்பினர் நடிக்கிறார். அவர்களுடைய இதயத்தில் ஏறி இருக்கிற கொள்கை அவர்களை இயங்க வைத்தது. அப்படி நீங்களும் இந்த இயக்கத்தின் கொள்கையை நெஞ்சத்தில் பதித்துக்கொள்ளுங்கள். நமக்கான கொள்கை, நம் மக்களுக்கான கொள்கை, எளிய மக்களுக்கான கொள்கை இது. அனைவருக்கும் அனைத்தும் கிடைக்க வேண்டும் என்ற கொள்கை இது. இந்த கொள்கைக்கு உங்களை உட்படுத்திக் கொள்ளுங்கள். உங்களை இயக்கத்திற்கு ஒப்படைத்துக் கொள்ளுங்கள். நன்றி, வணக்கம்.*

*(நிறைவு)*

## கழகப் பொதுச்செயலாளருக்கு ஆஸி.யில் பாராட்டு விழா



*ஆஸ்திரேலியா தமிழ் கலை மற்றும் கலாச்சார இயக்கம் சார்பில் கழகப் பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன் மற்றும் போராசியர் சரசுவதி ஆகியோர்க்கு பாராட்டு விழா 14.11.2025 அன்று வடக்கு ஆஸ்திரேலியாவின் அடிலெய்ட் மாகாணத்தில் நடைபெற்றது.*

*லாரன்ஸ் அண்ணாதுரை வரவேற்புரையாற்றினார். கழகப் பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன் மற்றும் போராசியர் சரசுவதி ஆகியோரின் ஆவணப்படங்கள் திரையிடப்பட்டன.*

*விடுதலை இராசேந்திரன் பேசுகையில் ஜாதி, மதம் அரசியல் அமைப்புகளில் சிக்காமல் ஒற்றுமை உணர்வுடன் தமிழர்கள் செயல்பட வேண்டும் என்று உரையாற்றினார்.*



*தோழர்களின் ஆஸ்திரேலிய வருகையை கொண்டாடும் விதமாக இந்த பாராட்டு விழா அமைந்தது. ஆஸ்திரேலிய வாழ் தமிழ் குடும்பங்கள் 150-க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். இரவு உணவு வழங்கப்பட்டது. மிகுந்த உற்சாகத்துடனும் ஆர்பரிப்புடனும் இந்த விழா நடைபெற்றது குறிப்பிடத்தக்கது.*

# ஜீவா இந்தியை எதிர்த்தாரா?

## ஜீவாவின் பெரியார் மீதான விமர்சனம் (4)

- கொளத்தூர் மணி

***ஜீவா இந்தியை ஆதரித்தார் என்று குறிப்பிட்டதற்கு பல பேர் கொதித்தெழுந்து ஆதாரத்தைக் கேட்கத் தொடங்கினார்கள். அது குறித்தும் சில செய்திகளைப் பார்ப்போம்.***

*பெரியார் காங்கிரசில் இயங்கியபோது 1921-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் காந்தியார் பெரியாரின் இல்லத்துக்கு வந்து தங்கி இருந்திருக்கிறார். அப்போது அன்னியத் துணிகள் பகிஷ்கரிப்பு என்ற பெயரால் வெளிநாட்டுத் துணிகள் எரிக்கப்பட்டு இருக்கின்றன. அடுத்ததாக 1922-ஆம் ஆண்டில் ஈரோடு பெரியார் இல்லத்திற்கு மோதிலால் நேருவும், டாக்டர் அன்சாரியும் வந்ததன் நினைவாக ஈரோடு வெங்கட்ட நாயக்கர் சத்திரத்தில், ஒரு இந்தி மொழி கற்பிக்கும் பள்ளியை, ஒரு பாதி காங்கிரஸ் செலவிலும், மறுபாதி தமது செலவிலும் நடக்கும் வகையில் தொடங்கியுள்ளார். ஆனால் அதே ஆண்டு இறுதியில் திருப்பூரில் நடந்த தமிழ்நாடு காங்கிரஸ் கட்சி மாநாட்டின் பொதுக்கூட்டத்தில் “இந்தியைப் பரப்புவது என்று கூறிக்கொண்டு இந்தியில் உள்ள துளசிதாஸ் இராமாயணத்தை பரப்புவதைக் கண்டித்தும், வருணத்தையும் தீண்டாமையும் காப்பாற்றும் இராமாயணத்தையும் மனுசாஸ்திரத்தையும் எரிக்க வேண்டும்” என்றும் பேசியுள்ளார்.*

*1922 நவம்பரில் கயாவில் நடந்த அகில இந்திய காங்கிரஸ் மாநாட்டு நிகழ்ச்சிகளில் இந்திக்கு முதலிடம் கொடுத்து வட நாட்டினர் அனைவரும் இந்தியிலே பேசியதால் மனம் நொந்த இந்திய தேசிய காங்கிரஸின் செயலாளராக இருந்த ஆந்திர ரத்னா கோபாலகிருஷ்ணய்யா “காங்கிரசில் எல்லோரும் ஹிந்தியில் தான் உரையாற்றுகிறார்கள், உரையாற்றினார்கள்; ஆனால் இந்திக்கு முதலிடம் அளிப்பது நமது அடிமைத்தனத்தை வேறொரு உருவத்தில் நிலைநாட்டுவதாக முடியும்” என்று தொடங்கிய உரையை “ஆகவே இந்தியை பொது மொழியாக்குவது பற்றி மிக மிக விளிப்பாக இருக்க வேண்டுமென்றும் நமது அரசியல்வாதிகளை எச்சரிக்க வேண்டிய காலம் வந்துவிட்டது” என்றும் முடித்துள்ளார்.*

*அதுபோலவே 1925 ஆம் ஆண்டு பெல்காமில் அகில இந்திய காங்கிரஸ் நடந்து முடிந்ததும் இந்தி முயற்சியினைக் கண்டித்து அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார். அவரே தனது ‘வாணி ஒப்பாரி’ என்ற அரிய பாடல் தொகுப்பில் “இந்தியை புகுத்துவதன் மூலம் காந்திஜி என்னை வனவாசம் செய்ய அனுப்புகிறார்” என்று தெலுங்கு மொழி அன்னை மனம் உருகி அழுவதாக பாடலும் எழுதி இருக்கிறார்.*

*1925 ஆம் ஆண்டு நவம்பர் இறுதியில் காஞ்சிபுரத்தில் நடைபெற்ற தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் மாநாட்டில் இருந்து வெளியேறிய பெரியார் 14.3.1926 குடி அரசில் ‘தமிழிற்குத் துரோகமும் ஹிந்தி பாஷையின் ரகசியமும்’ என்று எழுதிய ஒரு கட்டுரையில் “இம்மாதிரி பலன் தரத்தக்க இந்திக்கு நாம் பாடுபட்ட முட்டாள்தனத்திற்கும், நாம் பணம் கொடுத்த பைத்தியக்காரத்தனத்திற்கும் வெட்கப்படாமலும் இருக்க முடியவில்லை” என்றும் “பிராமணர் அல்லாதவருக்கு ஏற்பட்ட பல ஆபத்துகளில் இதுவும் ஒன்றாய் முடியும் போலிருக்கிறது; பொதுவாய் இந்தி என்பது வெளி மாநிலங்களில் பிராமணப் பிரச்சாரம் செய்ய கற்பித்துச் செய்யும் ஒரு வித்தை ஆகிவிட்டது” என்றும் கண்டித்து எழுதுகிறார்.*

**சென்னை மாகாணத்தில் கட்டாய இந்தித் திணிக்கப்பட்டதையும், இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் கடுமையாக ஒடுக்கப்பட்டதையும் சிங்காரவேலர் கண்டனம் செய்தார். பார்ப்பன இந்து மதத்திற்கு எதிராக நாத்திக கருத்துகளையும் வலியுறுத்தி வந்தார். ஆனால் ஜீவாவோ, கட்டாய இந்தியை ஆதரித்து ஜனசக்தி யில் எழுதிக் கொண்டிருந்தார்.**

*பெரியார் 1925 காஞ்சிபுரம் மாநாட்டில் இருந்து வெளியேறிய பின்னர் மாநாட்டுத் தலைவரான தமிழ்த் தென்றல் திரு.வி.க “ தமிழக இளைஞர்கள் இந்தி சேவா தளத்தில் இணைய வேண்டும்; சேவா தளத்தின் கிளைகள் ஒவ்வொரு நகரத்திலும் தாலுகாக்களிலும் அமைக்கப்பட வேண்டும்; இந்தியைப் பரப்புவதில் ஆர்வம் குறைந்துள்ளது. அதை மாற்றி தமிழர்கள் இந்தியை விரைவாகவும் நன்றாகவும் பயில வேண்டும்” என்ற தீர்மானத்தை முன்மொழிந்து நிறைவேற்றியுள்ளார்.*

*அதே திரு.வி.க வங்காளத்தைச் சார்ந்த புகழ்பெற்ற தேச பக்தரும் ‘மாடன் ரிவ்யூ’ இதழின் ஆசிரியருமான ராமானந்த சட்டர்ஜி “இந்தியைப் புகுத்த செய்யப்படும் முயற்சி தீங்கானது” என்பதை மிக விளக்கமாக 1931 மே மாதம் தனது இதழ் எழுதியிருந்த நீண்ட கட்டுரையை தனது ‘நவசக்தி’ ஏட்டில் 25.5.1931 அன்று மொழிபெயர்த்து வெளியிட்டுள்ளார்.*

*பெரியாரும் 2.1.1929 குடிஅரசு ஏட்டில் ‘இந்தி புரட்சி’ என்ற தலைப்பில் தலையங்கமும், 10.5.1931இல் குடிஅரசில் ‘கதரும் இந்தியும்’ என்ற தலைப்பில் கட்டுரையும், 17.1.1932 இதழில் ‘சமஸ்கிருத சனியன்’ என்றும் தொடர்ச்சியாக எழுதி வந்துள்ளார். 14.06.1931 நன்னிலம் சுயமரியாதை மாநாட்டிலும், 18/19.06.1932 மன்னார்குடி மாநாட்டிலும், 13.01.1936 சென்னை பச்சையப்பன் கல்லூரி ‘தமிழ்த் திருநாள் விழா’விலும் தொடர்ச்சியாக இந்தி எதிர்ப்பு குறித்து பேசி வந்துள்ளார்.*

*இவற்றையெல்லாம் சொல்வதற்குக் காரணம் 1929 செங்கல்பட்டு மாகாண சுயமரியாதை மாநாட்டிலும், 1930 ஈரோடு மாகாண சுயமரியாதை மாநாட்டிலும், 1931 விருதுநகர் மாகாண சுயமரியாதை மாநாட்டிலும் கலந்து கொண்டதாக குறிப்பிடப்பட்டுள்ள ஜீவா நிச்சயமாக இந்தி எதிர்ப்புக் கொள்கையை அறிந்தவராகவும் ஏற்றவராகவும் தானே இருந்திருக்க முடியும்? மேலும் 1926இல் சிராவயல் ஆசிரமத்தில் இருந்தபோது காந்தியாரிடம் வர்ணாசிரமம் குறித்து வாதிட்டதாகச் சொல்லப்படும் ஜீவா வருணாசிரம, பார்ப்பன மேலாதிக்கம் ஆகியவற்றின் எதிர்ப்பாளராகத்தானே இருந்திருக்க முடியும்?*

*ஆனால் 1936இல் பெரியாரிடம் இருந்து விலகிப்போன ஜீவா ‘ஜனசக்தி’ ஏட்டின் ஆசிரியராக இருந்த ஜீவா 11.06.1938 இதழில் ‘ஹிந்தி அவசியமா?’ என்ற தலைப்பில் நீண்டதொரு தலையங்கத்தை எழுதியுள்ளார்.*

*“ஆயிரம் மடங்கு தமிழனுக்குத் தொண்டு செய்து இருக்கிற, தொண்டு செய்து வருகிற ஒரு தமிழனை (இராஜாஜி) பிரதமராகக் கொண்டிருக்கிற மந்திரி சபையார் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தைப் போல் சுயலாப நோக்கோடு பலாத்காரத்தால் அல்ல; தமிழர்கள் இந்தியைத் தேசிய பொது பாஷையாக கற்றுத் தீர வேண்டும் என்ற நல்லெண்ணத்தோடு அன்பால் வற்புறுத்துவது, தமிழைக் கொலை செய்துவிடும் என்று கூச்சலிடுவார்களேயானால் அவர்கள் தமிழர்களா? தமிழ் அபிமானம் உடையவர்களா? தமிழின் ஜீவ சக்தியில் நம்பிக்கை உடையவர்களா?” என்ற கோபம் கொந்தளிக்கும் கேள்விகளை முன்வைத்தது பெரியார் மீது மட்டுமல்ல; இந்தி எதிர்ப்பு வாரியத்தின் தலைவர்களான அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் தமிழ்த் துறை தலைவராக இருந்த நாவலர் சோமசுந்தர பாரதியார், மறைமலை அடிகள், அவரது மகள் நீலாம்பிகை அம்மையார், கி.ஆ.பெ.விசுவநாதம், பண்டிதை நாராயணி அம்மையார் ஆகியோரையும் நோக்கித்தான்!*

*“முதலில் எதிர்ப்பு வீரர்களை எடுத்துக் கொள்வோம். கே.வி.ரெட்டி நாயுடுகார் சர் பட்ட அலங்காரி; மாஜி கவர்னர். பெரியார் ஈ.வெ.ரா எந்த சாக்கிலும் காங்கிரசைத் திட்டி திட்டியே சாவதென்ற தீர்க்கமான தீர்மானத்திற்கு வந்து அந்த ‘புனித’ கைங்கரியத்திலே தனது ‘பொன்னான’ நேரத்தைப் போக்கிக் கொண்டிருப்பவர். ஸ்ரீ சி.டி. நாயகமோ ஜஸ்டிஸ் கட்சியின் கீழ் வளர்ந்த கடுமையான வகுப்புவாதி. **மேற்சொன்ன அத்தனை பேரும் ஏகாதிபத்தியத்தின் தாஸானுதாசர்கள். ஏகாதிபத்திய எஜமானர்களின் மேஜைகளிலிருந்து விழும் ரொட்டித் துண்டுக்கு நாக்கில் ஜலம் ஊற அண்ணாந்து நிற்கும் அரசியல் பிற்போக்காளர்கள்.”***

***“ஏகாதிபத்தியத்திற்கு காவடி எடுப்பதன் மூலம் விலா புடைக்க வயிறு வெடிக்கக் கொழுக்கும் சுயநல ஓநாய்களாய்** இருத்தல் வேண்டும். **மடையர் பேச்சையும் வஞ்சகர் வீச்சையும்** ஞாய புத்தியும் நல்லெண்ணமும் படைத்த எவரும் காதறுந்த ஊசி அளவு கூட பொருட்படுத்த மாட்டார்கள்.*

*‘முடவன் கொம்புத்தேனுக்கு ஆசைப்படுவது போல்’ மீண்டும் பொதுஜனங்களில் ஒரு சாராரையாவது வகுப்புவாத ஜுரத்திற்கு இரையாக்க முடியுமா என்கிற சூழ்ச்சி தான், ‘அக்ரஹார ஆட்சி ஒழிக!’ என்கின்ற ஜன்னிப் புலம்பல் காங்கிரஸ் நிர்வாகத்தை அக்கிராகார ஆட்சி என்று பிதற்றுவதைப் போல் உள்ள அசட்டுத்தனத்தையும் பச்சை பொய்யையும் நாம் இதுவரை கண்டதில்லை. ஹிந்தியை கட்டாய பாடமாக்க கூடாது என்று கிளர்ச்சி செய்பவர்கள் ‘காங்கிரஸ் ஒழிக’ என்று அலறுவானேன்? தமிழை அரவணைத்து ரட்சிக்க புறப்பட்ட இவர்கள் காங்கிரஸ் மந்திரி சபை ஒழிக என்று குறித்து குதித்து யோசிப்பானேன்’ ........... என்றெல்லாம் இந்தி எதிர்ப்பு போராட்டக்காரர்களை சகட்டுமேனிக்கு விமர்சனம் செய்துள்ளார்.*

*“தேசிய போராட்டத்திற்குத் தேசிய பாஷை அவசியம் என்பது கைப்புண்ணை பார்க்க கண்ணாடி காட்டுகிற மாதிரி. பல திறப்பட்ட பாஷைகள் பேசப்படும் நம் நாட்டில், தேசியப் போராட்டத்திற்குப் பொதுஜன சக்தியைத் திரட்ட வேண்டுமானால் ஒரு பொதுமொழி எவ்வளவு அவசியம் என்பதை எடுத்துக் கூற வேண்டியது இல்லை. **பொது பாஷையாக இருக்க தகுதியுடைய பாஷை எது? பழம் பெருமை படைத்த பாஷையா? வண்டி வண்டியாக இலக்கணங்களும் இலக்கியங்களும் உடைய பாஷையா? ‘சிவனார் போல அடியும் அனாதியுமற்ற’ பாஷையா**? எஜமானர்கள் இனிக்க இனிக்கப் பேசும் பாஷையா? இன்று பிறந்த பாஷையா? அல்லது எந்த பாஷை தேச மக்களின் பெரும்பான்மையோரால் பேச முடிகிறதும், பேசினால் அறிய முடிகிறதுமான பாஷையே புது பாஷையாக இருக்க எல்லா வகையான தகுதி உடையது. அப்படியானால் **ஹிந்தி தான் இந்தியாவின் பொது பாஷையாக இருக்க முற்றிலும் தகுதி உடையது என்று அழுத்தம் திருத்தமாக அறைகிறோம்.** மறுப்பவர் மறுக்கட்டும்! தேசிய சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டு மதர்ந்து கிளர்ந்து நிற்கும் பொது ஜனங்கள், பொது பாஷையாகிய ஹிந்தியை தேசிய பாஷையாக அட்டி இல்லாமல் அங்கீகரிக்க வேண்டும் என்று சுட்டிக் காட்டவும் வேண்டுமோ?”*

*“மந்திரி சபையின் ஹிந்தித் திட்டம், தங்களுடைய ஏகாதிபத்திய எதிர்ப்புத் திட்டத்தின் ஓர் அம்சம் என்பதை பொது ஜனங்கள் நன்றாக உணரவேண்டும்!”*

*“இந்த பொதுஜன விரோதிகளின், இந்தி எதிர்ப்பு என்னும் வஞ்சக வலையில் ஒரு நாளும் பொது ஜனங்கள் சிக்க மாட்டார்கள் என்று நம்புகிறோம். முடிவாக சமீபத்தில் இவ்விஷயமாக வெளிவந்துள்ள சர்க்காரின் அறிக்கையும், ராஜாஜியின் விளக்கத்தையும் நன்றாக சிந்தித்துப் பார்த்து ஹிந்தி எதிர்ப்பு என்னும் விஷ வலையில் சிக்கி உழலும் வாலிபர்கள் திருந்துவார்களாக!*

*மேலே காட்டப்பட்டுள்ளதுதான் ஜீவா அவர்கள் ‘ஜனசக்தி’யில் எழுதிய தலையங்க வரிகள். இப்போது சொல்லுங்கள் ஜீவா இந்தியை ஆதரித்தாரா? எதிர்த்தாரா?*

*நினைவூட்ட ஒரு செய்தி. 1936 நவம்பரில் நடந்த சமதர்மக் கட்சியின் முதல் மாநாட்டில் நிறைவேற்றப்பட்டத் தீர்மானத்தின்படி கட்சி கலைக்கப்பட்டு ம.சிங்காரவேலர், ஜீவா போன்ற அனைத்து சமதர்மிகளும் காங்கிரசில் சேர்ந்தனர். **ஜீவா 1937-இல் வேலூரில் நடந்த தமிழ்நாடு காங்கிரஸ் மாநாட்டில் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டர்.***

*சுயமரியாதை இயக்கத்தில் இருந்து விலகி காங்கிரசில் ப. ஜீவானந்தம் போன்றோரைச் சேர்த்தவர் **ம. சிங்காரவேலர்**. அந்த சிங்காரவேலர் தனது இறுதி நாட்களில் பிற காங்கிரஸ் கம்யூனிஸ்டுகளிடமிருந்து வேறுபட்டவராக இருந்தார். **சென்னை மாகாணத்தில் கட்டாய இந்தித் திணிக்கப்பட்டதையும், இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் கடுமையாக ஒடுக்கப்பட்டதையும் ம. சிங்காரவேலர் கண்டனம் செய்தார்.** பார்ப்பன இந்து மதத்திற்கு எதிராக நாத்திக கருத்துகளை வலியுறுத்தி வந்தார். ஆனால் ஜீவாவோ, கட்டாய இந்தியை ஆதரித்து ‘ஜனசக்தி’யில் எழுதிக் கொண்டிருந்தார்.*

Posted at Egmore RMS,Pathirika Channel, Chennai-08
date of publication - every thursday tamil weekly Reg.No.tn/cc(S)Dn/459/25-27 licenced to post wpp no.tn/PMG(CCR)/WPP-462/25-27
puratchi periyar muzhakkam registered with the registrar of newspaper for india under no.tntam/2002/07776

## "ஜாதி நமக்கு அவமானம்"

# ஈரோடு, கோவையில் தீவிர பரப்புரை!



**ஈரோடு:** வடக்கு மாவட்டக் கழகத்தின் சார்பில் கடந்த 09.11.2025 ஞாயிறு மாலை பவானி அந்தியூர் பிரிவு பகுதியில் 'ஜாதி நமக்கு அவமானம்! மனிதம் நமது அடையாளம்!' தெருமுனைக் கூட்டம் நடைபெற்றது.

கூட்டத்திற்கு ஒன்றியச் செயலாளர் வினோத் தலைமையேற்க, பரப்புரைச் செயலாளர் வேணுகோபால் முன்னிலை வகிக்க செல்வக்குமார் வரவேற்புரை ஆற்றினார்.

மாவட்டத் தலைவர் நாத்திக ஜோதி, விசிகவின் ஆற்றல், தலைமைக் கழகப் பேச்சாளர் .கா.சு வேலுச்சாமி, நாமக்கல் மாவட்டத் தலைவர் சாமிநாதன், மமகவின் மாநில தொண்டரணி செயலாளர் முஹம்மது ஆகியோர் கருத்துரையாற்றினர்.

இராம. இளங்கோவன் கழக வெளியீட்டுச் செயலாளர், பரப்புரைப் பயணத்தின் நோக்கத்தினை விளக்கி நிறைவுரையாற்றினார். பெரியார் பிஞ்சு அறிவுக்கனல் பெரியார் குறித்த பாடலை பாட பழனிச்சாமி நன்றியுரை ஆற்றினார்.

நிகழ்வில் பெரியார், அம்பேத்கர் மற்றும் கழகத்தின் செயல்பாடுகள், திராவிட மாடல் அரசின் சாதனைகள், மற்றும் பிரதமர் நரேந்திர மோடி குறித்த குறும்படங்கள் திரையிடப்பட்டு மக்கள் இடையே பெரும் வரவேற்பைப் பெற்றது. தோழர்கள் ராமன், மயில்சாமி, நடராஜன், ரமேசு, மூர்த்தி, சித்தா பழனிச்சாமி, கலைச்செல்வன், நிவாஸ் ,ஜெகநாதன், அருளானந்தம், துரை, நாமக்கல் தோழர் தண்டபாணி, ஆகியோர் கலந்து கொண்டனர். நிகழ்வின் இறுதியில் தோழர்களுக்கு இரவு உணவு பவானி ஒன்றிய கழகத்தின் சார்பில் வழங்கப்பட்டது.

**கோவை:** சூலூர் ஒன்றியக் கழகம் சார்பில் "மனிதம் நமது அடையாளம் ஜாதி நமக்கு அவமானம்" தெருமுனைக் கூட்டம் 09.11.2025 - சூலூர் புதிய பேருந்து நிலையம் முன்பு மாலை 04.30 முதல் 06.00 மணியளவில் நடைபெற்றது. கண்ணம்பாளையம் பேருந்து நிறுத்தம் பகுதியில் 06.30 முதல் 08.00மணி வரையில் மக்கள் ஆதரவுடன் நடைபெற்றது.




தெருமுனைக் கூட்டங்களுக்கு கழக தலைமைக் குழு உறுப்பினர் சூலூர் பன்னீர் செல்வம் தலைமை தாங்கினார். தோழர்கள் பொங்கலூர் கார்த்தி, ரங்கநாதபுரம் நவீந்தரகுமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கழகப் பொருளாளர் திருப்பூர் துரைசாமி, கழக சமூக ஊடகப் பொறுப்பாளர் பரிமளராசன், தலைமைக் குழு உறுப்பினர் நிர்மல் குமார், கோவை மாநகரச் செயலாளர் வெங்கட், திருப்பூர் மாநகர அமைப்பாளர் முத்து, கோவை தமிழ்நாடு மாணவர் கழக அமைப்பாளர் நவீன் குமார், கதிரவன், சூலூர் பேரூராட்சி 18 வார்டு திமுக கவுன்சிலர் பசுமை விஜயகுமார், திமுக சூலூர் நகரச் செயலாளர் உரம் கௌதமன், சூலூர் பாவேந்தர் பேரவை ஆசிரியர் வேலு மயில் ஆகியோர் உரையாற்றினர்.

கோவை மாவட்ட அமைப்பாளர் சூலூர் தமிழ்ச்செல்வி நன்றி உரையாற்றினர். முருகராசு தி.இ.த.பே, தண்டபாணி பாவேந்தர் பேரவை,நாகலட்சுமி, திருப்பூர் வடக்கு ஒன்றிய அமைப்பாளர் அய்யப்பன், கோவை மோகன கிருஷ்ணன் ஆகிய தோழர்கள் கலந்து கொண்டனர்.

# சேலம் கிழக்கு, வடக்கு மாவட்டக் கழக கலந்துரையாடல்!



**சேலம் கிழக்கு:** இளம்பிள்ளையில் சேலம் கிழக்கு மாவட்ட அமைப்பாளர் முத்துமாணிக்கம் கடையில் 09.11.2025 ஞாயிற்றுக்கிழமை காலை 11.00 மணியளவில் மாவட்டத் தலைவர் சக்திவேல் தலைமையில் கலந்துரையாடல் கூட்டம் நடைபெற்றது.



**சேலம் மேற்கு:** மேட்டூர் பெரியார் படிப்பகத்தில் 08.11.2025 சனி மாலை 6.00 மணியளவில் மேட்டூர் நகரத் தலைவர் மார்ட்டின் தலைமையில் ஆலோசனைக்கூட்டம் நடைபெற்றது.

**கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன:**

**தீர்மானம் - 1:** சேலம் கிழக்கு மாவட்டத்தின் சார்பில், 2026ஆம் ஆண்டிற்கான புரட்சிப் பெரியார் முழக்கத்திற்கு 500 சந்தாக்களை வருகிற டிசம்பர் 24 அன்று மாவட்ட கழகத்திடம் ஒப்படைப்பதென தீர்மானிக்கப்பட்டது.

**தீர்மானம் - 2:** நவம்பர் 26 சட்ட எரிப்பு நாளை முன்னிட்டு சேலம் கிழக்கு மாவட்டத்தின் சார்பில் 10 தெருமுனைக் கூட்டங்கள் நடத்துவதென தீர்மானிக்கப்பட்டது.

**தீர்மானம் - 3:** டிசம்பர் 24 கோவையில் நடக்கும் தீண்டாமைக்கு எதிரான ஆர்ப்பாட்டத்தில் சேலம் கிழக்கு மாவட்டத்தின் சார்பாக பெருவாரியாக தோழர்கள் கலந்து கொள்வதென தீர்மானிக்கப்பட்டது.

**தீர்மானம் - 4:** மாமாங்கம் டால்மியா போர்டில் ஜவுளிப் பூங்கா என அறிவித்து 60 சாயப்பட்டறைகள் அமைக்கப்பட உள்ளன. இதனால் மாமாங்கம் சுற்று வட்டாரப் பகுதிகளில் விவசாய பாதிப்பு, குடிநீர் பாதிப்பு மற்றும் சுற்றுச்சூழல் பாதிக்கும் நிலை ஏற்படக்கூடிய சூழல் ஏற்பட்டிருக்கிறது. எனவே அதை தடுக்கும் வகையில் கழகத் தலைவர் அவர்களிடம் ஆலோசனைகளைப் பெற்று அனைத்து இயக்கங்களையும் ஒருங்கிணைத்து ஆர்ப்பாட்டம் நடத்துவதென தீர்மானிக்கப்பட்டது.

**தீர்மானம் - 5:** கழகத் தோழர்களுக்கு ஏற்படும் சட்ட ரீதியான பிரச்சனைகளை அணுகுவதற்கு தேவையான உதவிகளை செய்ய அமைப்பு ரீதியாக உதவ ஒரு குழு அமைக்க தீர்மானிக்கப்பட்டது. நிறைவாக இளம்பிள்ளை நகரச் செயலாளர் மோகன்ராஜ் நன்றி கூற கலந்துரையாடல் கூட்டம் நிறைவு பெற்றது.

இக்கலந்துரையாடல் கூட்டத்திற்கு சேலம், இளம்பிள்ளை, ஏற்காடு, நங்கவள்ளி, மேட்டூர், சிந்தாமணியூர், கொங்கணாபுரம் ஆகிய பகுதிகளில் இருந்து தோழர்கள் கலந்து கொண்டனர்.

கலந்துரையாடல் கூட்டத்தில் கலந்துகொண்ட தோழர்களுக்கு இளம்பிள்ளை தோழர்கள் தமிழ்மணி அவர்களும் குட்டி (எ) சௌந்தர்ராஜன் அவர்களும் மதிய உணவாக மாட்டிறைச்சி பிரியாணி ஏற்பாடு செய்திருந்தார்.

கூட்டத்தில் மேட்டூர், கொளத்தூர், மேட்டூர் ஆர்.எஸ், நங்கவள்ளி, காவலாண்டியூர் ஆகிய பகுதிகளில் இருந்து பொறுப்பாளர்கள், தோழர்கள் கலந்து கொண்டனர்.

நிறைவாக சேலம் மாவட்ட இளைஞர் அணிச் செயலாளர் பிரபாகரன் நன்றி கூற கலந்துரையாடல் கூட்டம் நிறைவு பெற்றது.

# மனோஜ்குமார் - அஞ்சலி இணையேற்பு விழா!



ஈரோடு மாவட்டம் கோபிசெட்டிபாளையத்தைச் சேர்ந்த தந்தை பெரியார் பிரியாணி கடை உரிமையாளர் கழகத் தோழர். கி.சுப்பிரமணியன்-சாவித்திரி ஆகியோரின் மகன் மனோஜ்குமார் அவர்களுக்கும், திருச்சி மாவட்டம், மணப்பாறை பண்ணாங்கொம்பு பகுதியைச் சேர்ந்த வை.சுப்பிரமணி - பார்வதி ஆகியோரின் மகள் அஞ்சலி அவர்களுக்கும் வாழ்க்கைத் துணை நல ஒப்பந்த விழா 16.11.2025- அன்று, ஞாயிற்றுக்கிழமை 11 மணி அளவில் கோபிசெட்டிபாளையம் சீதா திருமண மண்டபம் முதன்மை அரங்கத்தில் நடைபெற்றது.

தி.மு.க. நெசவாளர் அணி மாநிலச் செயலாளர் சிந்து இரவிச்சந்திரன் முன்னிலை வகித்தார். ஈரோடு வடக்கு மாவட்டத் தலைவர் க.நாத்திக ஜோதி வரவேற்புரையாற்றினார். கழக வெளியீட்டுச் செயலாளர் இராம. இளங்கோவன் தலைமையுரையாற்றினார். கழக அமைப்புச் செயலாளர் ப. இரத்தினசாமி, கழகப் பொருளாளர். துரைசாமி, தலைமைக் கழகப் பேச்சாளர் வேலுச்சாமி, ஈரோடு வடக்கு மாவட்டச் செயலாளர் செல்வக்குமார், கழகத் தலைமைக் குழு உறுப்பினர் காவை. ஈஸ்வரன், திராவிடர் விடுதலைக் கட்சி தலைவர் அன்பு மகேசு, அதிமுக நகரச் செயலாளர் பிரினியோ கணேஷ், எஸ்டிபிஅய் கோபிசெட்டிபாளையம் தொகுதிச் செயலாளர் சர்ஜித் ரகுமான், தி.க. பொதுக்குழு உறுப்பினர் யோகானந்தம், உள்ளிட்டோர் வாழ்த்துரையாற்றினர். மாநாடுபோல் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் திராவிடர் கழகம், தந்தை பெரியார் திராவிடர் கழகம், திமுக, அதிமுக உள்ளிட்ட பல்வேறு அமைப்புகளின் தோழர்கள், நிர்வாகிகள், மற்றும் கழகத் தோழர்கள் சேலம், ஈரோடு, கோவை, திருப்பூர் ஆகிய மாவட்டத்திலிருந்து பெருந்திரளாகக் கலந்துகொண்டனர். கழக முன்னோடி அக்ரி.ஆசைத்தம்பி நிகழ்ச்சியை ஒருங்கிணைத்தார். மணமக்கள் சார்பில் ஈரோடு வடக்கு மாவட்ட வளர்ச்சி நிதியாக ரூ.10,000 வழங்கப்பட்டது.மதுரை, புரட்சிக் கவிஞர் பேரவை நிர்வாகி பாலசுப்பரமணியன் (நாக.பாலன்) நன்றியுரையாற்றினார்.

## சந்தா சேகரிப்பீர்!

**2026-ஆம் ஆண்டுக்கான புரட்சிப் பெரியார் முழக்கம் இதழ் சந்தா சேகரிப்புப் பணிகளை கழகத் தோழர்கள் விரைவாக தொடங்கி, டிசம்பர் மாத இறுதிக்குள் அனுப்பி வைக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.**

**ஆண்டு சந்தா ரூ.300**
**அய்ந்தாண்டு சந்தா ரூ.1,500**

**- விடுதலை இராசேந்திரன்,**
**பொதுச்செயலாளர், திராவிடர் விடுதலைக் கழகம்.**

**பெரியாரிய, திராவிட இயக்க, சமகால அரசியல் கருத்துகளைத் தாங்கி வரும் வார இதழை வாங்கிப் படியுங்கள்.. பரப்புங்கள்...**

**தொடர்புக்கு: 6381277760.**

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS Under WPP
Posted : November 21, 2025

owner and publisher by : k. rajendran, from 29, Journalists colony, thiruvalluvar nagar, thiruvanmiyur, chennai - 600 041.
and printed by : S. Theesmas, at lilly soosai offset, new no.8, old No.12/1, mohammed usain lane, royapettah, chennai - 600 014.
editor ; k. rajendran